பொதுக்காலத்தின் 2ஆம் ஞாயிறு ”A” ஆண்டு

**வாசகங்கள்:**

**முதல் வாசகம் : எசா 49: 3, 5-6**
**இரண்டாம் வாசகம்: 1 கொரி 1: 1-3**
**நற்செய்தி வாசகம்: யோவா 1: 29-34**

**அழைக்கப்படுதல் / அழைத்தலை உணர்தல்**

**முன்னுரை:**

சில ஆண்முகளுக்கு முன் ஒரு இளம் பெண் என்னை சந்தித்து தனதுப் படிப்பை முடித்தப்பின் தன்னைத் தானே தொலைத்துவிட்டதைப் போன்றும் எந்தப் பாதையில் பயணிப்பத என்பதில் நிச்சமில்லாது இருப்பதைப் போன்றும் உணர்வதாகப் பகிர்ந்துக் கொண்டாள். அவளுக்கக் கிடைத்த ஒவ்வொரு சந்தர்ப்பமும் அவளுக்கு நடைமுறைக்கு சாத்தியமானதாகவும் தெரிந்தது அதே சமயத்தில் அது அவளுக்கு அதகப்படியானதாகவும் தோன்றியது. ஒருநாள் அவள் நடைப்பயிற்சி செய்துக கொண்டிருந்த போது ஒரு வீட்டின் ஜன்னல் ஓரத்தில் எரிந்துக் கொண்டிருந்த ஒற்றை மெழுகுத்திரி காற்றில்அலைமோதி நிலையற்று எரிந்துக் கொண்டிருந்தது. அந்த மெழுகுத்திரியின் ஒளி அந்தப் பெண்ணின் மனத்தில் சிறிய உற்சாகத்தை அளித்தது. அப்போது தான் அவள் அழைத்தல் அல்லது அழைக்கப்படுபவது டின்பது தனக்குத் தானே ஒரு பாதையைத் தேர்ந்துக் கொள்ளவது மட்டுமல்ல, ஆனால் முதலில் அந்த அழைப்பு கவனத்தை ஈர்க்க வேண்டும், அதற்கு தனக்கு வெளியிலிருந்துக் கிடைக்கும் ஆதரவு, அதன்மீதான நம்பிக்கை, அதை ஏற்பதற்கான வலிமை ஆகியவையும் தேவை.

அழைக்கப்படுதல் / அழைத்தலை உணர்தல் என்றத் தலைப்பு ஒவவொரு மனிதருக்குமானது. நான் ஏன் அழைக்கப்பட்டுள்ளதாக உணருகிறேன்? நான் ஏன் இந்த/அந்தப் பாதைக்கு அழைத்து வரப்பட்டுள்ளேன்? இது எனது தனிப்பட்ட திறமையின் காரணமாக அல்லது எனது அறிவுத்திறனுக்காக நிகழ்ந்ததா?
அல்லது யாரோ ஒருவர் என்னைக் கூப்பிட்டிருக்கிறாரா? அவர் என்னை அதை ஏற்க சொல்கிறாரா? அவர் என்னில் நம்பிக்கைக் கொண்டிருக்கிறாரா? அவர் எனக்குத் தேவையான ஆதரவையும், ஆற்றலையும் தரவிருக்கிறாரா?

இன்றைய வார்த்தை வழிபாடு நமது அழைத்தலைக் குறித்தும் அதற்கு நாம் இறைவனின் வழியாக அளிக்கும் சான்றுக் குறித்தும் பேசுகிறது. சான்ற பகருவோர் தான் கூறுவது சரியானது என்றக் கூறினால் மட்டும் போதாது அது உண்மையானதாகவும் இருக்க வேண்டும். எனவே நாம் பேசும் வாக்குகளையும் நமது வாழ்வையும் சோதனைக்குட்படுத் துவோம்.

- இயேசு எனக்கு யார்?
- நான் எனது வாழ்க்கையின் வாயிலாக மற்றவர்களுக்கு இயேசுவை சுட்டிக்காட்டு கிறேனா?

இத்தகைய செயல்முறை நமக்கு நன்மை பயப்பதற்காகவே மேற்கொள்ளப்பட வேண்டும். நமது இதயங்களை இயேசுவுக்குத் திறந்து வைத்து அவர் நமக்கு என்னக் கூற விரும்புகிறாரோ அதை நாம் கவனமுடன் செவிமடுப்போம்.
(சற்று நேரம் மௌனம் )

**மறையுரை - ”இதோ கடவுளின் ஆட்டுக்குட்டி”**

**- அழைக்கப்பட்டவர் / தூய்மையாக்கப்பட்டவர் / அனுப்பப்பட்டவர்”**

**உற்சாகம் குறித்து சிறு குழந்தையில் கற்பிக்கப்பட்டப் பாடம்:**

சில ஆண்டுகளுக்கு முன் ஒரு பெண்மணி தனது சிறுவயது அனுபவம் குறித்து என்னிடம் இவ்வாறு பகிர்ந்துக் கொண்டார். சிறு வயதில் அவளும் அவளது சகோதரனும் வஙலிலட விளையாடிக் கொண்டிருந்த போது புயல்காற்றொன்று பலமாக வீசி அவர்களை அச்சுறுத்தியது. அவளது சகோதரன் பயத்தால் உறைந்துப் போனான். ஆனால் அவனது

சகோதரியோ அவனதுக் கரங்களைப் பற்றிக் கொண்டு "அஞ்சாதே நானிருக்கிறேன். நான் உன்னை பத்திரமாக அழைத்துச் சென்றுவிடுவேன்" என்றுக் கூறினாள். அவளும் சிறியவளாகஇரந்தாலும் தன் சகோதரனை பத்திரமாக வீட்டிற்கு அழைத்து வந்தாள். இது நடந்த பல ஆண்டுகளுக்குப் பின் அவள் தான் அழைக்கப்படுதலை இலேசாக உணர ஆரம்பித்தாள். தான் கடவுளதல் அழைக்கப்படுவதை, கடவுளின் கரிசனை, பாதுகாப்பை, வழிநடத்துதலை, மற்றவர்களுக்கு உதவ வேண்டும் என்ற அழைப்பை, அதாவது அந்த உதவி செய்தல் அவளது ஆற்றலுக்கு மீறினதாக இருந்தாலும் உதவ வேண்டும் என்ற உந்துதலை அவள் உணர்ந்தாள். இந்த கதை (நிகழ்வு) இன்றைய இறைவார்த்தையைப் பிரதிபலிக்கிறது. நாம் ஒவ்வொருவருமே அழைக்கப்பட்டவர்கள், புனிதப்படுத்தப்பட்டவர்கள், அனுப்பப்பட்டவர்கள். கிறிஸ்து தாம் இந்த உலகின் பாவ பாரத்தை சுமக்க வந்ததைப் போல நம்மையும் அவர் பணியைத தொடர்ந்தாற்ற நம்மையும் அழைக்கிறார்.

"இதோ கடவுளின் ஆட்டுக்குட்டி"

இன்றைய நற்செய்தியில் திருமுழுக்கு யோவான் "இதோ கடவுளின் ஆட்டுக்குட்டி ஆட்டுக்குட்டியாம் இவரே உலகின் பாவத்தைப் போக்குபவர்" (யோவா 1:29) நமக்கு வெகு பரிச்சயமான வார்த்தைகள் ஆயினும் அவை மிக ஆழமானவை. யோவான் இயேசுவைப் பார்த்து "இதோ இவரே இறைவாக்கினர்" என்றோ "இதோ இவரே ஆசிரியர்" என்றோ கூறவில்லை. ஆனால் அவர் "இதோ கடவுளின் ஆட்டுக்குட்டி" என்றுக் கூறுகிறார்.

விடுதலையின் அடையாளமான ஆட்டுக்குட்டி:

விடுதலையின் அடையாளமான ஆட்டுக்குட்டி என்பதன் பொருள் என்ன? இப்போது நாம் பழைய ஏறபாட்டில் உள்ள எகிப்தை நினைவிற் கொணர்வோம். அடிமைத்தனத்தில் வாழ்வுக் கொண்டிருந்த இஸ்ரயேல் குடும்பங்கள் பாஸ்கா விழாவன்று தங்கள் குடும்பத்திற்கு ஒன்றாக ஆட்டுக் குட்டி ஒன்றை அடிப்பர். அழிப்பவன் உங்கள் வீடுகளில் புகுந்து தாக்குமாற அவர் அனுமதிக்க மாட்டார் (விப 12:21-25) மாறாக அவர்கள் அடிமைத்தனத்திலிருந்து மீட்கப் படுவார்கள். அந்த ஆட்டுக்குட்டி அடிமைபட்டிருந்த இஸ்ரயேல் மக்களின் விடுதலையின், மீட்பின் அடையாளமாக இருக்கிறது. யோவான் மக்களுக்குப் பாவ அடிமைத்தனத்திலிருந்து விடுமுறையை சுட்டிக்காட்டுகிறாாம். அதுவே நம்மைத் தூண்டி முடிவெடுக்கச் செய்கிறது. பின்னர் ஆலயத்தில் பாவப்வரிகார பலிகள் ஒப்புக்கொடுக்கப்பட்டன. ஆயினும் அந்த பலிகளால் மானுடம் முழுமையான மீட்பைக் கண்டடைய முடியவில்லை. இறைமகனால் மட்டுமே முழுமையான பாவப்பரிகார பலியை ஒப்புக்கொடுக்க முடிந்தது. ஒவ்வொருத் திருப்பலியும் கிறிஸ்துத் தம்மையே பலியாக ஒப்புக் கொடுக்கும் நிகழ்வு இது நம்மை விசுவாசத்துடன் நமது மீட்பை ஏற்றுக் கொள்ளும் அழைப்பை விடுக்கிறது.

துன்புறும் ஊழியர்:

எசாயா இறைவாக்கினரின் துன்புறும் ஊழியர் குறித்த கவிதைத் தொகுப்பான "அடிப்பதற்கு இழுத்துச் செல்லப்பட்ட ஆட்டுக்குட்டிப் போலும் உரோமம் கத்தரிப்போர் முன்னிலையில் கத்தாத செம்மறி போலும் அவர் தம் வாயைத் திறவாதிருந்தார் .. ஏனெனில் நாம் கடவுளோடு நாம் அமைதியல் உறவாடவே" என்பதை நமக்கு நினைவூட்டுகிறது. இயேசுவின் பாடுகள் வெறும் துன்பங்களும் வேதகைளும் மட்டும் அல்ல ஆனால் அவை இறைவனின் மானுட மீட்பிற்கான அளப்பறிய அன்பாகும். ஒருமுறை பங்கிலிருந்த ஒருவர் என்னிடம் " நற்கருணை உட்கொள்ளுமுன் நான் அதற்குத் தகுதியற்றவனாக உணர்ந்தால், நான் என்ன செய்ய வேண்டும்?" என்றுக் கேட்டார். நான் அவரிடம் "குரு நற்கருணையை உயர்த்திக் காட்டி இதோ இறைவனின் செம்மறி இவரே உலகின் பாவங்களைப் போக்குபவர்" என்றுக் கூறும் போது நீங்கள் "நீர் என் உள்ளத்தில் எழுந்தருள நான் தகுதியற்றவன்" என்றுக் கூறும்போதே உங்கள் பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன. அந்த செபம் நம்மை மீட்பளிக்கும் ஆட்டுக்குட்டியின் கரங்களில் ஒப்படைத்து விடுகிறது என்று பதிலளித்தேன்". என்றார்.

தூயோராக வாழ அழைப்பு:

புனித பவுல் கொரிந்தியருக்கு எழுதிய முதல் திருமுகத்தில் நமக்கு விடுக்கப்பட்ட அழைப்பையும் அதன் மேன்மையையும் குறித்து வலியுறத்திக் கூறுகிறார். "இயேசு கிறிஸ்துவோடு இணைக்கப்பெற்றுத் தூயோராக்கப்பட்டு இறைமக்களாக

அழைக்கப்பட்டுள்ள .... (1 கொரி 1:2-3). இது ஒரு ஆச்சரியமான செய்தியே. ஏனெனில் தூயோர் தங்கள் சொந்த தகுதி, நற்பண்புகால் அலல மாறாக கிறிஸ்து தூயோராக இருப்பதால் தான் அவர்கள் தூயோராக இருக்கின்றனர். ஒரு தொழிற்கூடததில் ஒரு தொழிலைக் கற்றுக் கொள்ளும் தொழிலாளி தனது தொழிலைக் கற்பதறகு பல தவறுகள் செய்துக் கொண்டுத் திணறினாலும். சிரமப்பட்டாலும் அவரை பணிக்கமர்த்திய அவரது முதலாளி அவரை பேணிக் காக்கிறார். அதே போன்று கடவுள் நம் ஒவ்வொருவரையும் பல்வேறு விதங்களில் அழைக்கிறார். பெற்றோராக. ஆசிரியர்களாக, பணியபளர்களாக, அண்டை வீட்டாராக அழைத்து நாம் எங்கே எவ்வாறு அழைக்கப்பட்டாலும் அதில் நாம் நிலைத்து நின்று ஒளிர வேண்டும் என்பதே அவர் விருப்பம். இவ்வுலகில் இறைவனால் நமக்கென ஒதுக்கப்பட்ட இடமும் பணியும் மாற்றமுடியாதவை.

சான்று பகர முன்வஜதல்:

எப்போதெல்லாம் தேவைப்பட்டதோ அப்போதெல்லாம் இயேசுவை மற்றவர்களுக்கு சுட்டிக்காட்டி அறிமுகம் செய்வதே புனித திருமுழுக்கு யோவானின் பணியாக இருந்தது. எனது பங்கிலிருந்த வயதான தன்னார்வத் தொண்டரான மறைக்கல்வி ஆசிரியை தனக்கு வயதாகி விட்டக் காரணத்தால் தனது பணியை மற்றொரு இளம் ஆசிரியையிடம் ஒப்படைத்தார். தான் அபப்ணியில் இல்லையென்றாலும் அந்தப்பணி தொடர்ந்து நடைபெறுவதைக் கண்டு மட்டற்ற மகிழ்ச்சியடைந்தார். தனது பதவிகள் /பொறுப்புகளிலிருந்து விலகி மற்றவருக்கு இடமளிப்பது தனது சான்றிலிருந்து விலகவது ஆகாது. மாறாக அந்தப்பணி மென்மேலும் சிறந்த வளர்ச்சிக் காண்பதை உறுதி செய்கிறது.

அருளும் அமைதியுமே அடித்தளங்கள்:

"எல்லா இடங்களிலும் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை அறிக்கையிடும் யாவருக்கும் நம் தந்தையாம் கடவுளிடமிருந்தும், ஆண்டவர் இயேசு கிறிஸ்துவிடமிருந்தும் அருளும் அமைதியும் உரித்தாகுக" (1கொரி 1:3) என்று எழுதுகிறார் புனித பவுல். நாம் செயல்படுவதற்கு அடித்தளமான இறைக் கொடைகளாக இருப்பவை அருளும் அமைதியுமே. கடவுளின் ஆட்டுக் குட்டியாக விளங்கும் இயேசு கிறிஸ்துவே இதை வடிவமைத்தவர். அந்த வடிவமைப்பு எப்படிப்பட்டதெனில் நமது குடும்பங்களில், நாம் வாழும் சுற்றுப்புறங்களில், அண்டை அயலாரில், நமது சமூகங்களில் விடுதலையை வழங்குவதற்காக நாம் பளுவை சுமப்பதும், மீட்பை அளிப்பதும், அன்புக்கு சான்றுப் பகர்ந்து வாழ்வதும் ஆகும்.

நேற்று, இன்று, நாளை ஆகிய மூன்றையும் ஒன்றுக்கொன்று தொடர்புப்படுத்திக்கொள்வது:

திருமுழுக்கு யோவானின் அறிக்கை முற்காலம், தற்காலம், வரும்காலம் ஆகிய மூன்றையும் இணைப்பதாக அமைந்திருக்கிறது. அந்த மூன்றும் பாஸ்கா ஆட்டுக் குட்டி, ஆலயத்தில் ஒபபுக் கொடுக்கப்பட்ட பலிகள், எசாயாவின் துன்புறும் ஊழியர் - இவை மூன்றுமே கிறிஸ்துவை சுட்டிக் காட்டுகின்றன. நமது கிறிஸ்துவ வாழ்வும் இதே பாதையில் தான் பயணிக்கிறது அதாவது கிறிஸ்துமஸின் ஒளியிலிருந்து, கல்வாரி சிலுவைக்கும், அவரது உயிர்பபு, அதன்பின் தொடர்ந்தாற்றப்படும் மறைப்பணிகள் ஆகியவை. இயேசுவை மாடடைக் குடிலின் தீவனத் தொட்டியில் கிடத்தப்பட்டக் குழந்தையாகவே பார்த்துக் கொண்டிருந்தால் மற்றவைள் தெரியாமல் போய்விடும். கடவுளின் ஆட்டுக் குட்டியான அவர் நமக்காகத் தம்மையே முழுமையாக வழங்குகிறார். அவா நம்மைத் தம்மோடு ஒப்புறவாகச் செய்கிறார், நம்மை வலுப்படுத்தி தமது ஒளியில் நாமும் பங்குப் பெறச் செய்கிறார்.

நமது அழைத்தலை வாழ்தல்:

இன்று இதன் பொருள் என்ன? உங்கள் அழைப்பினை உணர்ந்துக் கொள்ளுங்கள். இருளில் ஒளியாகத் திகழ அழைக்கப்பட்டுள்ளீர்கள். நீங்கள் தூயவராக மதிக்கப்படுகிறீர்கள் என்பதை உங்கள் சொந்த பண்புகளால் அலல மாறாக கிறிஸ்துவால் அவ்வாறு மதிக்கப்படுகிறீகள் என்பதை உணர்ந்து அந்த மதிப்பீட்டினைத் தழுவி அரவணைத்துக் கொள்ளுங்கள். கிறிஸ்து உங்களது பளுவை சுமந்தார் என்பதை உங்கள் குடும்பங்களில், உங்கள் பணியிடங்களில், உங்கள் சமூகங்களில், வான்றாகப் பகருங்கள். கடவுள் தரும் அருளையும் அமைதியையம் ஏற்றுக் கொள்ளுங்கள். அவையே உங்கள் செயல்பாடுகளை, நீங்கள் மனிதருடன் கொள்ளும் உறவை வழிநடத்தட்டும்.

**இறையன்புக்கு உருக்கொடுத்தல்:**

**இது ஒரு முடிவுரைக்கான கதை -- ஒரு இளைஞன் நோயுற்றிருந்தத் தன் நண்பனுக்கு தனது உடனிருப்பாலும், அவனது தன்பங்களைக் காதுக் கொடுத்துக் கேட்டும், அவனுக்கு ஆறுதல் அளித்தும், அவனுக்காக செபித்தும். ஆதரவளித்தும் உதவி செய்து வந்தான். சிறிது காலத்திற்குப்பின் அந்த நண்பன் ''நான் உன் வழியாகக் கடவுளின் அன்பை உணர்ந்தேன். இதுவே நமக்கு அழைக்கப்பட்டுள்ள அழைப்பு கடவுளின் இரக்கத்தையும், அவரது ஒளியையும் அணிந்தவர்களாக இருங்கள். நமது உலகத்தின் பாரத்தையே சுமந்த கிறிஸ்துவுக்காக நாம் நமது அன்றாட வாழ்வின் விழியாக சான்றுப் பகருவோம்.**

**முடிவுரை -- பணியில் இறங்கதலட:**

**நாம் நற்கருணையை அண்டிச் செல்லும் போது ''இதோ கடவுளின் ஆட்டுக்குட்டி இவரே உலகின் பாவங்களைப் போக்குபவர்'' என்ற திருத்தூதர்கள் புனித யோவான், பவுல் ஆகியோரின் குரலொலியை எதிரொலிப்போமாக. இவையே நமது தியானமுமாக, ஆறுதல் மொழிகளாக, நமது அழைப்பாக அமைவதாக. நம்முள்ளே கிறிஸ்துவின் அருளை, அமைதியை, ஒளியைத் தாங்கியவர்களாக, அவரால புதுப்பிக்கப்பட்டு கிறிஸ்து விட்டுச் சென்ற பணியைத் தொடா இவ்வுலகில் பணிக்காக இறங்கி நமக்களிக்கப்பட்ட அருளை, அமைதியை, ஒளியை நாம் சந்திக்கும் மனிதர் அனைவருக்கும் வழங்குவோமாக. ஆமென்.**